## கோரும் வாய்மைப் பத்திரம் (கடன் கணக்கு எண் ....)

**ரூ...../-** **தேதி .........**

..................ஆகிய நான், கேட்பு எழுப்பப்படும் போது, ஒருவேளை பெற்ற கடன் தொகையை கட்டத் தவறியிருந்தால், நிறுவனச்சட்டம் 1956 இன் கீழ் பதிவு பெற்ற ஒரு நிறுவனமான **யூனிமணிக்கு** அல்லது அதன் உரிமை பெற்ற அதன் அலுவலகத்துக்கு/ கிளைக்கு ரூபாய் .....................................ஐ அத்துடன் இதில் குறிப்பிட்ட தேதியிலிருந்து %................என்ற விகிதத்தில் மாதாந்திர/காலாண்டு/வருட வட்டியுடன் சேர்த்து செலுத்துவேன் .

**பெயர் மற்றும் கையெழுத்து**: ..........

2ரூபாய்

ஸ்டாம்பின் மேல் கையெழுத்து ரெவனிய

## விதிகள் மற்றும் நிபந்தனைகள்

1. கடன்தாரரால் நிறைவேற்றப்பட்ட மேலே கொடுக்கப்பட்டுள்ள கோரும் வாய்மைப் பத்திரத்தில், கடனுடன் ஒரு நிலையான வட்டி விகிதம் மற்றும் நிறுவனத்தால் நிர்ணயிக்கப்பட்ட தற்செயல் நிகழ்வுக் கட்டணமும் சேர்ந்திருக்கும், மற்றும் கடன்தாரருக்கு அவ்வப்போது தகவல் அளிக்கப்படும். இதற்காக ஒரு வருடம் என்பது 360 நாட்கள் கொண்டதாக கருதப்படும்.
2. இந்த கடனை பெறுவது விவசாயத்திற்காக அல்ல. நிறுவனம் ஆபரணங்களை 22 கேரட் தூய்மை அடிப்படையிலேயே மதிப்பீடு செய்யும். எங்கெங்கு ஆபரணத்தின் தூய்மை 22 கேரட்டுக்களுக்கும் குறைவாக இருக்கிறதோ, அங்கு அதிலிருந்து 22 கேரட்டை அடிப்படையாகக் கொண்டு ஒரு கிராமுக்கான விலை கணக்கிடபட்டு மாற்றி மதிப்பிடப்படும். அந்த கடன் தொகை (எல்டிவி) எந்த வகையிலும் அடகு வைக்கப்பட நகை மதிப்புக்கு 75%க்கு மிகாது. கடன் தொகை ,தங்கத்தின் எடை, மற்றும் ஒரு கிராமுக்கான விலை ஆகியவை ஆர்பிஐ வாழிகாட்டுதல்களின் படி இருக்கும் மற்றும் நிறுவனத்தின் முடிவே இறுதியானது. .கடன் பெறுபவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட திட்டத்தை சார்ந்து கடன் காலம் கடன் வழங்கப்பட தினத்திலிருந்து 3 முதல் 36 மாதங்கள் வரை இருக்கும். திட்டத்தில் பொதுவாக குறிப்பிட்ட விதிகளுக்கு மேல் கூடுதலாக வழக்கமான விதிகளும் கடன்தாரரை கட்டுப்படுத்தும்.
3. ஒருவேளை, கடன்தாரரை பற்றி ஏதாவது சந்தேகப்படும்படியான தகவல்கள் நிறுவனத்துக்குக் கிடைத்து, கடன்தாரர் செலுத்த வேண்டிய வட்டித் தொகை அல்லது கடன் நிலுவைத் தொகை ஆகியவைகளை செலுத்த மாட்டார் என்று நிறுவனம் கருதுமானால், கடன் நடப்புக் காலத்தில் ஒரு நியாயமான அறிக்கையை அனுப்புவதின் மூலம் கடன் தொகையையும் அத்தோடு சேர்ந்த அனைத்து நிலுவைத் தொகைகளையும் சேர்த்து திரும்பச் செலுத்துவதற்கு அல்லது திரும்பச் செலுத்துவதை துரிதப்படுத்துவதற்கு நிறுவனத்துக்கு உரிமை உண்டு. கடன்தாரர், நிலுவைத் தொகையை வழங்கப்பட்ட குறிப்பிட்ட காலத்துக்குள் செலுத்தத் தவறினால் ஆபரணங்கள் ஏலத்தில் விற்கப்படும்.
4. கடனை முடிக்கும் போது அடகு வைக்கும் / தொகை வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் வழங்கப்பட்ட தங்க கடன் ரசீதின் அசலை கிளையில் கண்டிப்பாக திரும்ப ஒப்படைக்க வேண்டும், அது இல்லாமல் ஆபரணங்கள் தரப்படமாட்டாது. அந்த அசல் ரசீது தொலைந்து போனால், கடன்தாரர் உடனடியாக எழுத்து மூலமாக நிறுவனத்துக்கு புகார் அளிக்க வேண்டும். அசல் நகைக் கடன் ரசீதை திரும்ப கிளையில் ஒப்படைத்து நிலுவைத் தொகையை முழுமையாக செலுத்தப்படுவது ஆகியவற்றுக்கு உட்பட்டு கடன்தாரர் அல்லது அவரால் அதிகாரமாளிக்கப்பட்டவர் ஆகியோர் மட்டுமே ஆபரணங்களைத் திருப்ப முடியும்
5. அனைத்து செலுத்தும் தொகைகள் மற்றும் வரவுச் சீட்டுகளுக்கும் கணினி மூலம் தயாராகும் இரசீதுகளை மட்டுமே நிறுவனம் அளிக்கும், செலுத்தும் தொகைகளுக்கும் அல்லது வரவுச்சீட்டுக்களுக்கும் கைகளால் தயாரிக்கப்பட்ட வேறு எந்த ஒரு இரசீதும் வழங்கப்படாது. செலுத்தப்படும் தொகை கிளைகளுக்கு வெளியே பெறப்பட்டால், செலுத்தப்பட்டதை உறுதி செய்து குறுஞ்செய்தி கடன்தாரரின் பதிவு பெற்ற கைபேசி எண்ணுக்கு உடனடியாக அனுப்பப்படும்.
6. கட்டணங்கள் அல்லது வட்டி விகிதங்கள் மற்றும் /அல்லது கடன்தாரரின் கணக்குக்கு புதிய கட்டணங்கள்/ தொகை விதிக்கப்படுவதை(எதிர்காலத்தில் பொருந்தத்தக்கவாறு) அறிமுகப்படுத்துவது உட்பட நடைமுறையிலுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளை திருத்தி அமைக்கும் உரிமையை நிறுவனம் தக்க வைத்துள்ளது. **கடனைப் பெறும் சமயத்தில் கடன்தாரர் நிறுவனத்துக்கு அளித்த குறிப்பிட்ட கைபேசி எண் அல்லது மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றுக்கு (அவருக்கு புரியக்கூடிய மொழியில்) இதுபற்றி குறுஞ்செய்தி அல்லது மின்னஞ்சல் மூலமாக கடன்தாரருக்கு முன்கூட்டியே அறிவிக்கப்படும். அம்மாதிரியான அறிவித்தல்கள் கிடைத்த 7 நாட்களுக்குள் மறுப்புத் தெரிவிக்காவிட்டால், அவை வழங்கப்பட்டதாக, பெற்றுக் கொள்ளப்பட்டதாக, மற்றும் ஒப்புக் கொள்ளப்பட்டதாக கருதப்படும்**. தொலைபேசி/மின்னஞ்சல் முகவரி/ முகவரி ஆகியவற்றில் ஏதாவது மாற்றம்

இருந்தால் நிறுவனத்துக்கு எழுத்து மூலம் கடன்தாரரால் உடனடியாக அறிவிக்கப்படவேண்டும் தவறினால், அம்மாதிரியான அறிவித்தல்கள் பெறப்படாததற்கு நிறுவனம் பொறுப்பேற்காது

7. வட்டி விகிதம் யூனிமணியின் வட்டி விகித மாதிரிகள் மூலமாக முடிவு செய்யப்படும் அது, நிதி செலவு, பரிமாற்றங்களின் செலவுகள், ஆபத்து கூடுதல் கட்டணம் மற்றும் சமபங்கு மூலதனத்தில் குறைந்த பட்சம் எதிர்பார்க்கப்படும் இலாபம் போன்ற பொருத்தமான காரணிகளை கருத்தில் கொள்ளும். ஆபத்தின் படிநிலை மாற்றங்களுக்கு நாங்கள் முழுமையான அணுகலை கடைப்பிடிக்கிறோம். அது கடன்தாரர்களை தரப்பிரிவுக்கு உட்படுத்தி பாரபட்சம் காட்டுவதில்லை. ஆனால் அதற்கு மாறாக ஒவ்வொரு கடன் தொகைக்கும் ஏற்றவாறு வட்டிவிகிதத்தை அமைக்கிறது.

8. கடன் தொகை அத்துடன் வட்டி மற்றும் இதர கட்டணங்களை நிர்ணயிக்கப்பட்ட கடன் காலத்திற்குள் கடன்தாரர் செலுத்தத் தவறினால், ஆபரணங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டு எடுக்க அவன்/அவள் நிறுவனத்துக்கு அதிகாரம் அளிக்கிறார்கள். ஏலம் விடப்படுவதற்கு முன் நிலுவைத் தொகைகளை செலுத்துமாறு ஒரு வேண்டுதலை நிறுவனம் பதிவுத்தபால் மூலம் கடன்தாரருக்கு அனுப்பும். அதைத் தொடர்ந்து ஒரு பத்திரிக்கை விளம்பரத்தையும் வெளியிடும். இந்த நடவடிக்கைகள் நிறுவனத்தின் அதிகாரம் பெற்ற பணியாளர்களால் நடத்தப்படும். ஏலத்திற்குப் பிறகு ஏதாவது மீத நிலுவைத் தொகை இருந்தால், கடன்தாரர் இதன் மூலம் மீத நிலுவைத் தொகையை நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு இதன் மூலம் ஒப்புக்கொள்கிறார், அவ்வாறு செலுத்தத் தவறினால், அந்த மீத நிலுவைத் தொகையை மீட்க கடன்தாரருக்கு எதிராக சட்டபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உரிமை நிறுவனத்திற்கு உள்ளது. அதற்கான அறிக்கை கட்டணங்களை ஒரு பதிவு அறிக்கைக்கு ரூ. 50 என்ற விகிதத்தில் ஆகும் செலவுகளை கடன்தாரர் ஏற்றுக்கொள்ள வேண்டும்

9. நிறுவனம் கடன்தாரருக்கு கடனைத் திருப்பிச்செலுத்த நியாயமான கால அவகாசம் என்று ஏற்றுக்கொள்ளும் வகையில் 7 நாட்கள் அவகாசம் கொடுத்த பின்னர் ஏலத்தை அறிவிக்கும். குறைந்த பட்சம் இரண்டு செய்தித் தாள்களில், அவற்றில் ஒன்று உள்ளூர் மொழியிலும் மற்றொன்று தேசிய தினசரி பத்திரிக்கையாகவும் இருக்கும் வகையில் விளம்பரம் அளிப்பதன் வழியாக பொதுமக்களுக்கு ஏலம் பற்றி அறிவிக்கப்படும்.

10. கடன்தாரரிடம் இருந்து நிறுவனத்துக்கு செலுத்தவேண்டிய நிலுவைத் தொகை ஏதாவது இருக்கும் பட்சத்தில், கடன் தொகையில் 25% மார்ஜின் தொகையை அனைத்து நேரத்திலும் நிறுவனத்தில் பராமரிக்க அல்லது இருப்பு வைத்திருக்க வேண்டுகிறது. பிணையின் மதிப்பு அதற்கு தொடர்புடைய பிணையின் சந்தை விலை அடிப்படையில் கணக்கிடப்படும். மார்ஜின் தொகை/பிணைத் தொகை எப்போது தயாராக இருக்கவேண்டும் என்ற தேதி மற்றும் நேரம் ஆகியவற்றை நிறுவனம் முடிவு செய்யும் என்பதற்கு கடன்தாரர் ஒப்புக்கொள்கிறார் மற்றும் அவ்வாறான மார்ஜின் தொகை/பிணைத்தொகைக்கான காலக்கெடுவுக்குப் பிறகு எந்த வகையிலும் செலுத்தப்படும் தொகைகளை நிறுவனம் ஏற்றுக்கொள்ள மறுக்கும்

11. பத்தி எண். 8 இல் குறிப்பிட்டவைகளுக்கும் மேலாக, மார்ஜின் தொகை இருப்பு 20% க்கும் கீழே செல்லுமானால், உடனடியாக எதிர்வரும் காலத்தில் கடன்காலம் முடிவதற்கு முன்னே கூட, எந்த நேரத்திலும் ஆபரணங்களை பொது வெளியில் ஏலத்தில் விட்டோ அல்லது தனிப்பட்ட ஏற்பாடுகளைச் செய்தோ விற்கும் உரிமையை நிறுவனம் தக்கவைத்துக் கொண்டுள்ளது. கடனைத் திருப்பிச்செலுத்த கடன்தாரர் நியாயமான கால அவகாசம் என்று ஏற்றுக்கொள்ளும் வகையில் கடன்தாரருக்கு 7 நாட்கள் அவகாசம் கொடுத்த பின்னர் ஏலத்திற்கு ஏற்பாடு செய்யும்.

12. அடகு வைக்கப்பட ஆபரணங்களுக்கு கடன்தாராரே முழு உரிமையாளர், வேறு எந்த நபருக்கும் எந்த உரிமையோ, பற்றோ, அல்லது கேட்புரிமையோ அதன் மீது இல்லை, மற்றும் அவற்றை அடகு வைக்க கடன்தாரருக்கு முழு உரிமை உள்ளது. ஆபரணங்களின் மீதான உரிமை குறித்து ஏதாவது தவறு இருக்குமானால், அதனால் நிறுவனத்துக்கு ஏற்படும் பாதிப்பு, செலவு மற்றும் விளைவுகளுக்கு கடன்தாரர் இழப்பீடு மற்றும் சட்டவிலக்குரிமை வழங்கவேண்டும்.

13. உங்கள் தங்க ஆபரணங்கள்(அடக்குவைக்கப்பட்ட ஈடு) மீது நிறுவனத்துக்குள்ள அனைத்து உரிமைகளையும் எந்த ஒரு தனிநபர்/நிறுவனம்/வங்கிகள்/நிதி நிறுவனங்கள் போன்றவற்றுக்கு முன்பணம் /கடன் பெறும் நோக்கத்துடன், இடமாற்றம் செய்ய, அடக்குவைக்க, விற்க, அல்லது உரிமை மாற்றம் செய்யும் உரிமையை நிறுவனம் தக்கவைத்துக் கொண்டுள்ளது, அது பற்றி கடன்தாரர் அறிவார் மற்றும் எந்த வித மறுப்பும் இன்றி அதை ஏற்றுக் கொண்டுள்ளார்.

14. .தங்க ஆபரணங்களின் மீதுள்ள விலை வீழ்ச்சி ஆபத்துக்கு ஈடு கட்டும் விதமாக இந்தக் கடனுக்கு அடிப்படையாக விருப்ப ஒப்பந்தங்களில் ஈடுபட நிறுவனத்திற்கு கடன்தாரர் அதிகாரம் வழங்குகிறார், அந்த விருப்ப ஒப்பந்தங்களுக்கான விகிதாச்சாரப்படியான தவணைத் தொகையை செலுத்தவும் இதன் மூலம் ஒப்புக்கொள்கிறார்

15. அடகு வைக்கப்பட அனைத்து ஆபரணங்களுக்கும் நிறுவனம் காப்பீடு செய்கிறது. இருப்பினும், ஆபரணங்களின் தரம் அல்லது தயாரிப்பு போன்ற சில காரணங்களால் ஏதாவது இழப்பு இருக்குமானால், அதற்கு நிறுவனம் பொறுப்பல்ல. இருப்பினும், அவ்வாறான இழப்புகள் நிறுவனம் அல்லது அதன் பணியாளர்களின் கவனக்குறைவால் ஏற்படுமானால், நிறுவனம் அதற்கான கடப்பாடுகளை ஏற்றுக்கொள்ளும்.

16. தவறான தகவல்களை அளித்து கடன் பெறப்பட்டது என்று நிறுவனம் கருதும் காரணம் உட்பட, கடன் வழங்கப்பட்டு அதற்கான காலக்கெடு முடிவதற்கு முன்னரே, கடனைத் திருப்பிக் கோரும் உரிமை நிறுவனத்துக்கு உண்டு. அவ்வாறு கோரப்படுகையில் கடன்தாரர் முழுக்கடன் தொகை வட்டியோடு சேர்த்து செலுத்தி அடகு வைக்கப்பட்ட தங்கத்தை மீட்டுக்கொள்ள வேண்டும்.

17. மேலும் கடன் விவரங்கள் உட்பட அனைத்து நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டது என்பதை கடன்தாரர் ஒப்புக்கொள்கிறார். தொகையை செலுத்த தவறுதல் மற்றும்/அல்லது விதிகள் மற்றும் நிபந்தனைகளை மீறும்

பட்சத்தில், சட்டப்படியாக நீதிமன்றம் அல்லது வேறு பொருத்தமான அமைப்புக்கள் மூலம் நிவாரணம் கேட்கும் உரிமை யூனிமணிக்கு உள்ளது.

18. நிர்வாகக் கட்டணம், வரி கட்டணம், சேவை தீர்வை வரி(முத்திரைத் தீர்வை உட்பட) ஜிஎஸ்டி, மற்றும் வரிகள் (அவ்வப்போது அரசால் அல்லது வேறு எந்த அதிகார அமைப்பால் விதிக்கப்படும் எந்த வகையான வரிகளும்) மற்றும் (▯) கடன் பெறுவதற்கு மற்றும் திருப்பிச் செலுத்துவதற்கான விண்ணப்பங்கள் (▯) கடனை மீட்டெடுத்தல் மற்றும் வட்டியோடு சேர்த்து வரவு வைப்பது (▯) பாதுகாப்பு நடைமுறைப்படுத்தல் (▯) அனைத்து வரிகள் மற்றும் வேறு கட்டணங்கள் மற்றும் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வது தொடர்பாக அரசு விதிக்கும் தீர்வைகள் செலுத்துதல் போன்ற அனைத்து கட்டணங்களையும் கடன்தாரர் ஏற்றுக்கொண்டு, செலுத்துவார் மற்றும் செலவை ஈடு செய்வார்.

19. நிலுவைத் தொகை வைத்துள்ள அனைத்து கடன்களின் அசல் தொகை மீதும் கூட்டுவட்டி விதிக்கப்படும். தண்டவட்டித் தொகையை அதன் தனிப்பட்ட விருப்பப்படி எந்த நேரத்திலும் மாற்றியமைக்க அல்லது திருத்தியமைக்கும் உரிமையை நிறுவனம் தக்கவைத்துக் கொண்டுள்ளது.

20. நிறுவனத்தின் துணை அமைப்புக்கள், கடன் வழங்கும் பணியகம், நாணய நிலை மதிப்பீடு செய்யும் முகைமைகள், வங்கிகள், நிதி நிறுவனங்கள், வங்கியல்லாத நிதி நிறுவனங்கள், தரவு வங்கிகள் அல்லது அரசு சார்ந்த அல்லது ஒழுங்குமுறை ஆணையங்கள்/ அமைப்புக்கள்/துறைகள் ஆகியவற்றுக்கு சட்டப்படியான மற்றும்/அல்லது ஒழுங்குமுறை தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு அனைத்து/ஏதாவது தகவல்கள் மற்றும்/அல்லது கடன் வசதி /கடன் பெற்றது தொடர்பான தரவுகளை வெளிப்படுத்த மற்றும் வழங்கும் அதிகாரத்தை கடன்காரர் நிறுவனத்திற்கு அளிக்கிறார்.

21. அனைத்து தகவல்களையும் அளிக்க தொடர்பு கொள்வதற்கான முகவரியாக விண்ணப் படிவத்தில் வழங்கப்பட முகவரியே எடுத்துக் கொள்ளப்படும். முகவரியில் ஏதாவது மாற்றம் இருந்தால் எழுத்து மூலம் நிறுவனத்துக்கு தெரிவித்து நிறுவனத்தின் ஒப்புகைச்சீட்டை பெற்றுக்கொள்ள வேண்டும்.

22. நிறுவனம் கடன்தாரர்களுடன் தொடர்பு கொள்ள கீழ்க்கண்டவை உட்பட ஆனால் அது மட்டுமில்லாத முறைகளை பயன்படுத்தும். அவையாவன, அஞ்சல், /தூதஞ்சல்/ ஒப்புகைச்சீட்டுடன் கூடிய பதிவு அஞ்சல்/ மின்னஞ்சல்/ தொலைத் தொடர்புகள் /குறுஞ்செய்தி ஆகியவை மூலம் தகவல்கள் அனுப்பும். தகவல்களை நிறுவனம் அனுப்பியவுடன் அது கடன்தாரரால் பெற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டு விட்டது என்று கருதப்படும் மற்றும் தான் அதை எப்போதும் காலதாமதமாக பெறப்பட்டது, முகவரி/எண் மாற்றம் காரணமாக அல்லது வேறு எந்த ஒரு காரணம் தொடர்பாகப் பெறப்படவில்லை, போன்ற எந்தவித காரணங்களைக் கொண்டும் மறுக்கமாட்டேன் என்பதை கடன்தாரர் ஒப்புக்கொள்கிறார்.

23. அடிப்படை தங்கம், தங்க புல்லியன், தங்க ஆபரணங்கள், தங்கக்காசுகள், தங்க பரிமாற்ற யூனிட்டுக்களின் வணிக நிதி (▯▯▯) மற்றும் பரஸ்பர நிதிகளின் தங்க யூனிட்டுகள் போன்ற தங்கத்தை எந்த வகையிலும் வாங்க இந்த கடன் மூலம் பெற்ற நிதியை, பயன்படுத்த மாட்டேன் என்று கடன்தாரர் உறுதி அளிக்கிறார். \

24. வட்டி செலுத்துவதற்கான நினைவூட்டல் மற்றும் /அல்லது நிறுவனத்தின் வேறு இதர திட்டங்கள் குறித்த குறுஞ்செய்தி/அழைப்பு ஆகியவற்றை பெறுவதற்கு கடன்தாரர் எந்தவிதமான மறுப்பையும் தெரிவிக்கவில்லை.

25. கடன் வழங்குவதற்காக, நிறுவனம், வங்கிகள்/நிதி நிறுவனங்களிடமிருந்து (▯▯) நிதியுதவியை பெற்றிருப்பது கடன்தாரருக்குத் தெரியும். நிறுவனத்தால் வெளிப்படையாக அங்கீகரிக்கப்பட்டவாறு, கடன்தாரர், அவர் செலுத்தவேண்டிய கடன் நிலுவைத் தொகைகளை நேரடியாக அந்த வங்கிகள்/நிதி நிறுவனங்களுக்கு (▯▯) செலுத்துமாறு ஒரு அறிவிப்பை பெற்ற பிறகு அவற்றுக்கு நேரடியாக செலுத்திவிடலாம் அம்மாதிரி செலுத்தப்படும் தொகைகள் நிறுவனத்துக்கு கடன்தாரர் செலுத்தக் கடமைப்பட்டுள்ள நிலுவைத் தொகைகளை கட்டிவிட்டதாக கருதப்படும்

.26. இந்தக் கடனை வழங்கியதன் மூலம் அடகு வைக்கப்பட்ட ஆபரணங்கள் 22 கேரட் தூய்மையான தரமுள்ளவை என்று நிறுவனம் உறுதி செய்ததாக கருதக்கூடாது. முறையான வழிகளின் மூலம் அந்த ஆபரணங்களின் தூய்மைத் தரத்தை தனிப்பட்ட முறையில் சோதிக்கும் சுதந்திரத்தை நிறுவனம் கொண்டுள்ளது. ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் அடகு வைக்கப்பட்ட ஆபரணங்கள் தரம் குறைந்தது அல்லது போலியானவை என்பது நிறுவனத்துக்கு தெரியவந்தால், நிறுவனத்தின் அம்மாதிரியான சோதனை முடிவுகளுக்கு கடன்தாரர் கட்டுப்பட்டவர். மற்றும் உடனடியாக கடன் தொகை மற்றும் வட்டியை செலுத்த மற்றும் நிறுவனத்துக்கு ஏற்பட்ட இழப்பை ஈடு செய்ய கடமைப்பட்டவர் ஆவார். அவ்வாறு செய்யத் தவறினால், அந்த இழப்புக்களுக்கு ஈடு செய்யும் வகையில் சட்டப்படியான நடவடிக்கைகளை எடுக்க நிறுவனத்திற்கு உரிமை உள்ளது.

27. கடன் பெறுவதற்கான ஆவணம் மற்றும் அது தொடர்பான இதர ஆவணங்களில் கண்டுள்ள பொருளடக்கங்களை அவன்/அவளுக்குத் தெரிந்த மொழியில் வாசித்து, விளக்கப்பட்டது என்பதை கடன்தரர், உறுதி செய்து பிரதிநிதித்துவப் படுத்துகிறார்.

28. குறிப்பிடபட்ட கடனுக்குரிய விதிகள் மற்றும் நிபந்தனைகளின் ஒரு நகலை பெற்றுக்கொண்டதை கடன்தாரர் உறுதி செய்கிறார்.

.29. இந்த கடன் ஆவணங்களில் கண்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளை, திருத்துவது முறையானது என்று கருதி, திருத்தங்கள் செய்வதற்கு யூனிமணிக்கு அதிகாரமுள்ளது. மற்றும் யூனிமணி அவற்றை எனக்கு முறையாக அறிவிக்கும் என்பதை இதன் மூலம் நான் ஏற்றுக்கொள்கிறேன்.

30. கடன்தாரர் கடன் தொகையை கடன் காலத்திற்கு முன்பே செலுத்த ஒருவேளை முடிவு செய்தால், கடன்தாரரிடமிருந்து அசல் நிலுவைத்தொகை மீது 0.25% முன்முடிப்பு கட்டணம் வசூலிக்கப்படும்.

31. கடன்தாரர் அவர் பெற்ற கடன் தொடர்பான எந்த ஒரு தகவல்கள் அல்லது தரவுகளை கிரடிட் இன்பர்மேஷன் பீரோ (இந்தியா)லிட் மற்றும்/அல்லது இது தொடர்பான அதிகாரத்தை ஆர்பிஐ அல்லது இதர சட்டபூர்வமான அமைப்புக்களிடமிருந்து பெற்ற இதர முகைமைகளுக்கு அளிக்க நிறுவனத்திற்கு ஒப்புதல் அளிக்கிறார். அம்மாதிரியான தகவல்களை அந்த முகைமைகள் அவர்கள் பொருத்தமானது என்று கருதும் வழிகளில் பயன்படுத்துவார்கள் என்பது கடன்தாரருக்குத் தெரியும்.

32. இந்த கடன் தொடர்பாக எழும் எந்த ஒரு தாவாவும் நடுவர் தீர்ப்பாயச் சட்டம் 1966 இல் வழங்கப்பட்டவைகளுக்கு (ஆர்பிட்ரேஷன் அண்டு கன்சிலியேஷன் ஆக்ட், 1966) இணங்க நிறுவனத்தால் அமர்த்தப்பட்ட தனி நடுவர் தீர்ப்பாயத்துக்கு அனுப்பப்படும். தீர்ப்பாய நடவடிக்கைகளுக்கான இடம் எர்ணாகுளம் ஆகும். இந்த பரிமாற்றங்கள் எர்ணாகுளம் நீதிமன்றங்களின் தனிப்பட்ட அதிகார எல்லைகளுக்கு உட்பட்டவை.

33. **கடன் காலம் முடிந்த கடன்களுக்கு அந்தக் கடனை முடிக்கும் காலம் வரை தண்டவட்டியாக வருடத்திற்கு 11.88% வசூலிக்கப்படும்.**

34. **தவணை கட்டத்தவறிய அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் தவணைத் தேதி முடிந்த பிறகு நாளொன்றுக்கு 3.6 % தண்டவட்டி பொருந்தும்.**

35. இந்த கடனுக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகள் அனைத்தையும் முழுமையாக வாசித்து புரிந்து ஏற்றுக் கொண்டேன் அதன் ஒரு நகல் எனக்கு வழங்கப்பட்டது. அந்த ஆபரணங்களில் ஏதாவது கற்கள் பதிக்கப்பட்டிருந்தால், அவற்றுக்கு சந்தையில் எந்த ஒரு மதிப்பும் இல்லை. குறிப்பிட்ட விதிகளுக்கு உட்பட்டு இந்த கடன் தொகையை வட்டியுடன் சேர்த்து செலுத்த நான் ஒப்புக்கொள்கிறேன். மேலே குறிப்பிட்ட அனைத்து விதிகள் மற்றும் நிபந்தனைகள் எனக்கு விளக்கிச் சொல்லப்பட்டது மற்றும் அதை நான் ஒப்புக்கொண்டேன்.

36. கடனுக்கான நன்னடத்தை விதிகள் நிறுவனத்தின் இந்த வலைத்தளத்தில் இருக்கிறது: www.unimoni.in.

**இடம் :** வாடிக்கையாளர் கையொப்பம்: ………

**தேதி :**